# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 21 வியாழக்கிழமை (07.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 11


# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வலுவான புதிய விதிகளுடன் அமுலுக்கு வந்தது

## சமாதானப் பேச்சு முயற்சிகளை பாதிக்காது என்கிறது அரசு

### மக்கள் பாதிக்கப்பட்டால் மேன்முறையீடு செய்ய வசதி

கொழும்பு, டிசெம்பர் 7

பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்' (Prevention of Terrorism Act) இலங்கைத் தீவு முழுவதும் நேற்று முதல் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும், சிறையில் அடைப்பதற்கும் பாதுகாப்புப் படையினருக்கு விசேட அதிகாரங்களை வழங்கும் இந்தச் சட்டம் புதிய பல துணை விதிகள் சேர்க்கப்பட்டு உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் அமுலுக்கு வந்திருப்பதாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வரும்வரை அமுலில் இருந்த இந்தச் சட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பல புதிய துணை விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் புதிய நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படாது. அது இன்னும் வலுப் பெறவே செய்யும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

- அத்துடன், இந்தச் சட்டத்தால் பொது மக்கள் பாதிக்கப்பட நேரின் அது குறித்து முறைப்பாடு செய்ய வசதி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்கு விதிகள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்றும், அவை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளன என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசரின் பிரதிநிதி யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ். நிலைமைகளை நேரில் அறிவதற்காக பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதியான அதிவண. மரியோ சொனாறி நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

விமானம் மூலம் நேற்றுப் பிற்பகல் யாழ். வந்த அவர் யாழ். ஆயர் அதிவண. தோமஸ்சவுந்தரநாயகம் மற்றும் குருமார்களுடன் கலந்துரையாடினார்.

யாழ். சிற்றாலயத்தில் இன்று காலை விசேட திருப்பலியை அவர் ஒப்புக் கொடுக்கவுள்ளார். (அ-1)

## விடுதலைப் புலிகளை தடைசெய்யக்கோரி இரு பிக்குகள் உண்ணாவிரதம்

கொழும்பு, டிசெ.7

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்று கோரியும் -

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறு கோரியும் - இரண்டு பிக்குகள் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துள்ளார்கள்.

தங்காலையில் அமைந்துள்ள ஜனாதிபதி வாசஸ்தலத்துக்கு சென்ற பிக்குகள் மனு ஒன்றைக் கையளித்தபின் போராட்டத்தை ஆரம்பித்தனர். (1)

## பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவதையும் துணைபோவதையும் தடைசெய்வதற்கான வழிமுறைகள் நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசெ.7

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதையும் அவற்றுக்குத் துணை போவதையும் தடைசெய்வதற்கான ஒழுங்குவிதிகளையும் நடைமுறைகளையும் ஜனாதிபதி அலுவலகம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

பொதுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இப்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் ''பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கான ஒழுங்கு விதிகள்'' என்ற பெயரில் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையின் விவரம் வருமாறு:-

சமாதானத்தை அடைதல், தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுதல், சமூக வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளையும் வழங்கல்களையும் பேணுவதற்கான அதன் கொள்கையுடன் இணைந்த வகையில் எந்தவொரு நபர் அல்லது குழுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான பரந்த செயல் விளைவுடைய நடவடிக்கைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தவுள்ளது.

தற்போதைய பாதுகாப்பு நிலைமை, பிரிவுக்கான அச்சுறுத்தல், சமாதான செயற்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை சரணடையக்கோருகின்றனர் படையினர்

### பாதுகாப்பு, புனர்வாழ்வு தரப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை சரண் அடையுமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கேட்டுள்ளது.

தலைமையகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச மட்டத்தில் பயங்கரவாத இயக்கமாக பட்டியலிடப்பட்டு தடைசெய்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் சத்திரச்சந்தி அருகே கிளைமோர்! 4 சிவிலியன்கள் பலி!

யாழ்ப்பாணம், டிச.7

யாழ். நகரின் மத்தியில் சத்திரச்சந்தி அருகே நேற்று நண்பகல் ஒரு மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பெண் ஒருவரும் சிறுமி ஒருத்தியும் உட்பட நால்வர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர். இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டது.

அப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி வெடித்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது.

இராணுவ வாகனம் ஒன்று அந்த இடத்தைக் கடந்து சென்றபோது கிளைமோர் வெடித்தது என்று முதலில் கிடைத்த தகவல்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் உரிமைகளுக்கு உறுதியளித்து வடக்கு - கிழக்கு இணைந்து இயங்கலாம்

### சட்ட நிபுணர்கள் குழுவின் சிபார்சு

கொழும்பு, டிசெ.7

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் உத்தரவாதமும் உறுதியும் அளித்து - அதற்கு வகை செய்து, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதற்குச் சாதகமாக -

அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட சட்ட நிபுணர்கள் குழு தயாரித்துள்ள அறிக்கையில் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பதினேழு பேர் கொண்ட நிபுணர்கள் குழு 37 பக்க அறிக்கையைத் தயாரித்துள்ளது.

மேற்படி அறிக்கை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் இன்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமஷ்டி ஆட்சிமுறைக்குள் அமைந்த கூடுதல் அதிகாரப் பகிர்வு முறையை பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான நிபுணர் குழு சிபாரிசு செய்யவுள்ளதாகவும் நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாக அமைக்கவுள்ள கடைத்தொகுதி வாடகைக்கு விடுவது தொடர்பான விளம்பரம்

புதிய பஸ் நிலையம் அமைந்துள்ள முற்றவெளிப் பகுதிக்கு முன்னால் உள்ள யாழ்.மாவட்டக் கிராமிய வங்கிகளின் சமாசத்திற்குச் சொந்தமான காணியில் 180 சதுர அடியுள்ள 12 கடைகள் தற்காலிகமாக அமைத்து வாடகைக்கு விடப்படவுள்ளது. குறிப்பிட்ட கடைத் தொகுதியில் கடைகளை வாடகைக்குப் பெற விரும்புபவர்கள் [20.12.2006] ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தங்கள் கேள்வி விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*பொதுமுகாமையாளர்,*
**யா.மா.கூ.கி.வ.சமாசம்.**

(சி/51479)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி மகேந்திரராணி இளங்கோ அவர்களின் அன்புத் தாய்
திருமதி **சுப்பிரமணியம் செல்லம்மா**
அவர்கள் 05.12.2006 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அத்துயரினை அவரின் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**யா/விக்கினேஸ்வராக் கல்லூரி.**
**கரவெட்டி.**

(சி/51477)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



*அமரர்*
அப்புக்குட்டி யேசுதாசன் செல்லத்துரை
(Rtd. Building Inspector)

*அன்னை மடியில்*
*25*04*1916*

*ஆண்டவன் அடியில்*
*07*11*2006*

மனிதருள் மாணிக்கமாய், அன்புக்குரியவராய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று இறைவனுடன்
ஒன்றித்த எம் அன்புத் தந்தையின்
நினைவலைகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

*சுண்டுக்குளி.*
*யாழ்ப்பாணம்.* (56511)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரன் ஞானேஸ்வரதேவி
*(ஞானம்)*



நீர்வேலிமேற்கு, கரந்தனைச் சேர்ந்த பரமேஸ்வரன் ஞானேஸ்வரதேவி நேற்று (06.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான A.K.வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் தம்பிமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் ரமேஸ் (கட்டடக் கலைஞர்-யாழ். பல்கலைக்கழகம்), சுமதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வேந்திராவின் (அவுஸ்திரேலியா) அன்பு மாமியும் ராஜராஜேஸ்வரி, கணேஸ் [illegible]ஸ்வரி, குகனேஸ்வரன் ஆகியோரின் சகோதரி [illegible] கனகசபாபதி, ஜமுனா, சிவலிங்கம், புஸ்ப[illegible]தேவி, வசந்தமல்லிகா, யமுனாமலர், சுந்தரேஸ்வரன், தில்லைநடராஜா, தங்கராசா, ஸ்ரீகாந்தன், தில்லைநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2006) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**பரமேஸ்வரன்.**
*(கணவர்)*

*கரந்தன்,*
*நீர்வேலி.* (56516)

### தம்பிஜயா யோகம்மா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா யோகம்மா நேற்று (06.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து-லட்சுமிப்பிள்ளையின் மருமகளும் அம்பிகை, கதிர்காமநாதன் (HARRY CLASS WOR KS Pvt. Ltd, Colombo) ஆகியோரின் தாயும் சிவசுப்பிரமணியம், நவமணி ஆகியோரின் மாமியும் சாந்திமதி, காந்திமதி (கனடா), மதியழகன், கலைமதி (U.K), இராசமதி (ஆசிரியை), சிவகரன், சிவநிதி, சிவரூபன், சிவரூபி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் புரந்தரி, கிர்ஷிகா, கிரிஷன், அபிலன், அக்ஷயா, விஷாகன், கஜவதனா, மோவிந்தா, ஜனனி, அகில், சுவீனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2006) வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"சாந்தி மாளிகை",*
**இணுவில் தெற்கு, இணுவில்.** (56517)

*தகவல்:*
**மகன், மகள்.**

## வாழ்த்துகின்றோம்



யாழ்.கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெறும்

**திருமதி** செல்வராணி மகாலிங்கம்
அவர்களின் அரியசேவையை உளமார்ந்த நன்றியுடன் நயப்பதுடன் ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

*கோட்டக்கல்விப் பணிப்பாளர்,*
*அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலக*
*உத்தியோகத்தர்கள்.*
**கோப்பாய் கல்விக் கோட்டம்.**

### தவறிவிட்டது

38, கச்சேரி நல்லூர் வீதி , யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சொர்ணகாந்தி படியலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (427544192 V) 28.11.2006 அன்று யாழ்.ஆஸ்பத்திரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்

## தேவை

சண்டெல் லைன் ஒன்று தேவை. நல்ல விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

*தொடர்பு:*
**021 222 2401**
**021 222 2814**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா நாகம்மா

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 510, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா நாகம்மா 6.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசையாவின் அன்பு மனைவியும் இராசரத்தினம், மகாலட்சுமி, பராசக்தி, யோகேஸ்வரன், (கிராமஅலுவலர், மண்கும்பான்) ஆகியோரின் அன்புத் தாயும், விஜயலட்சுமி, இந்திரசித்து, பவளகாந்தன், தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் கீதாஞ்சலி, லலிதா, விக்கினேஸ்வரன், மதீஸ்வரன், தவராசா, பகீரதன், ஹரிஹரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (7.12.2006) வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**இ.இராசரத்தினம்** *(மகன்),*
**இ.யோகேஸ்வரன்** *(மகன்),*
*கிராமஅலுவலர், மண்கும்பான்.*

மனோகரா தியேட்டர் அண்மையில்,
இல: 510, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (56517)

### சண்முகம் முத்தையா
**(இளைப்பாறிய ஆசிரியர் - உடுவில் மான்ஸ் பாடசாலை)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் முத்தையா நேற்று (06.12.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் மோகனரஞ்சன், மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசு, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரூபினியின் அன்பு மாமனும் சாருஜன், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2006) வியாழக்கிழமை ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**பு.பிரதாபன்,**
**தி.சிவகுமாரன்.**
*(பெறாமக்கள்)*

[illegible]
உடுவில். (56520)

## மரண அறிவித்தல்கள்

### குருநாதன் மதன்



சுன்னாகம் மேற்கு, கொத்தியாவத்தையை பிறப்பிடமாகவும் இருபாலை குளுக்கண்டி லேன், கோப்பாய், கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதன் மதன் 05.12.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் குருநாதன் - கமலாசினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் தர்சினி (ஜேர்மன்), ஜெனகன், ஜெனார்த்தனன் (அமரர்), நிருசன் ஆகியோரின் சகோதரனும் சுரேஸ்கரனின் (ஜேர்மன்) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7.12.2006) வியாழக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**குருநாதன் (தந்தை)**
**மல்லிகா (தாய்).**

**கட்டப்பிராய்,**
**இருபாலை.** (56507)

### அ.பி.குணசீலன்
**(சுகாதார முகாமைத்துவ உதவியாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.)**



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அ.பி.குணசீலன் நேற்று (06.12.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளையின் மகனும் இரத்தினபூபதியின் (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் பிரசாந்தன் (குணால் காலணியகம், நெல்லியடி), பத்மரூபன் (2ஆம் வருட, பொறியியல் பீடம், பேராதனை) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### கிறிஸ்தோப்பர் அந்தோனிப்பிள்ளை
**(இளைப்பாறிய தீயணைப்புப்படை உத்தியோகத்தர்)**



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இ/புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் அந்தோனிப்பிள்ளை 5.12. 2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் (மலர்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் இறப்யேற்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் அருட்சகோதரி வின்சென்ற் (பண்டத்தரிப்பு தியான இல்லம்), அருட்தந்தை டேவிட் (புனித சவேரியார் குருமடம்) ஆகியோரின் மாமனும் மேரிகிறிஸ்ரீனா (தேவி), கிறிஸ்ரிலூயில் (பிரான்ஸ்), மேரியசிந்தா (சாந்தி), மேரிகவிஸ்ரா (வசந்தி), செலின் (கனடா), அன்றுகிறேசியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலேந்திரன் (யா/ப.நோ.கூ.ச), ஜெயா (பிரான்ஸ்), அமலதாஸ் (தபால் ஊழியர்), ரமேஷ் (கனடா) சர்மிளா ஆகியோரின் மாமனும் யூட், லெளசிகா, லோஜினி, கலீன், நிரோஜன், நிக்சன், கிறிஸ்ரீனா, மிதுசனா, சங்கவி, சாம்பவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கிளி.இராமநாதபுரத்திலுள்ள சேமக்காலையில் 5.12.2006 அன்று நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**அ.நி.குலேந்திரன்**
**(மருமகன்).**

*34, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (56495)

### ஆறுமுகம் கனகசபை
**(முன்னாள் நேரக்கணிப்பாளர், இ.போ.ச, காரைநகர்)**



மடத்துக்கரையைப் பிறப்பிடமாகவும் S.M. கேணியடி, மல்லிகையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசபை கலாசாலை வீதி, திருநெல்வேலியில் நேற்று (6.12.2006) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் நாகம்மாவின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, நகுலேஸ்வரி, யோகேஸ்வரி, குலேந்திரன் (நிதி ஸ்ரோர்ஸ், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலாயுதம் (காலி), தருமலிங்கம் (கிராம சேவையாளர்), புவனேந்திரன் (கஜன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), பவானி ஆகியோரின் அன்பு மாமனும், தயாபரன் (பொறியியலாளர், RDA, வவுனியா), ரஜிதகௌரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), ஐங்கரன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவதாரணி (திறந்த பல்கலைக்கழகம், நுகே கொட), சுதாகரன் (மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஆனைமுகன் (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), முரளிதரன், முரளிரூபன், (கா.ஆ.தி. ம.ம.வி.காரைநகர்), முரளிராசன் (கா.ஆ.தி. ம.ம.வி, காரைநகர்), கஜானன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), நிசாந்தினி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), திவ்யானி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), உஷாலினி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (06.12.2006) புதன் கிழமை திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

3ஆம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 ஆவது ஆண்டு திருமண பந்தத்தில்



திரு திருமதி

**வேலாயுதர் நாகமுத்து**

தம்பதியினர் தமது 40 ஆவது ஆண்டு திருமண நாளை இன்று 07.12.2006 கொண்டாடுகின்றனர்.

அவர்களை நீடுழி வாழ வாழ்த்துபவர்கள்

சிவ இல்லம்,
புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(56486)

## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர் மீள் கேள்வி அறிவித்தல் - 2007

இப் பத்திரிகையில் கடந்த 10.11.2006 திகதிய விளம்பரத்தில் குத்தகைக்கு வழங்கப்படாத சந்தை, இறைச்சிக் கடைகளினை 2007 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 06.12.2006-18.12.2006 பி.ப. 3மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19.12.2006 மு.ப. 11மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 19.12.2006 நண்பகல் 12மணி

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர்.
05.12.2006

தம்பையா நடராசா
செயலாளர்

(சி-51468)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

837 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கடகம் **20 22 40 50**

05-12-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4697362 - 4711429

ஜக்பொட் பரிசு ரூபா.6,475,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 302,711 | 10/- | 3,027,110/- |
| 2 இலக்கங்கள் | 27,824 | 20/- | 556,480/- |
| 1 இல. + லக்கினம் | 27,535 | 30/- | 826,050/- |
| 2 இல. + லக்கினம் | 2,481 | 100/- | 248,100/- |
| 3 இலக்கங்கள் | 758 | 500/- | 379,000/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 5,000/- | 295,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,475,525/- | - |
| மொத்தம் | | | 5,731,740/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 361,377 | | 6,755,240/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,813,675/-

தொடர் இல. 5584908 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4706521-2-62 |
| கேகாலை | 4701498-1-32 |
| கண்டி | 4705057-2-36 |
| இரத்தினபுரி | 4701262-7-22 |
| குருநாகல் | 4706139-6-75 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## திருமண வாழ்வின் 55 ஆண்டுகள் நிறைவுநாள் 07-12-2006

பெருமைக்குரிய எங்கள் தந்தையும் தாயும்
மூத்த எழுத்தாளர் சாகித்திய இரத்தினம்
தி. ச. வரதராசன் / வரதர் (82)
திருமதி மகாதேவியம்மா வரதராசன் (76)
இருவரும் திருமண வாழ்வில் இணைந்து இன்று 55 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ்வேளையில் அவர்களை வாழ்த்தி வணங்கி இன்னும் பலகாலம் எம்மோடு வாழ்ந்திருந்து பெருமை சேர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

திருமதி செந்தாமரை சந்தானகோபாலன் (கனடா)
செல்வி தேன்மொழி வரதராசன் (கனடா)
திருமதி மலர்விழி சித்தார்த்தன் (லண்டன்) மற்றும்
பேரப்பிள்ளைகள் கபிலன், நங்கை, வாசன், ஆதி.

## மரண அறிவித்தல்

### கந்தையா துரைராஜா

(டீசல் பம் மெக்கானிக்)

அரியாலையைச் சேர்ந்த கந்தையா துரைராஜா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் எலிசபெத் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம்,தவமணி, சந்திரமதி, ஏகாம்பரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கட்கின்சன், லலிதா (H.N.B.வவுனியா), விஜிதா, ரொனிங்சன், நிஜந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவூார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2006) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2, புறடி லேன்,
அரியாலை யாழ்ப்பாணம்.
தொ.பே.: 024 222 3137

தகவல்:
க.ஏகாம்பரம் (தம்பி).

## தவறிவிட்டது

தி.இராஜநாதன் என்பவருடைய தே.அ.அட்டை (443520252V) இ.தெய்வானை என்பவருடைய தே.அ. அட்டை (495853454V) மற்றும் அவரது புற்று நோய் பற்றிய சகல வைத்திய ஆவணங்கள், குடும்ப உலர் உணவு அட்டை என்பன சண்டிலிப்பாய் தொட்டிலடிச் சந்தியில் 03.12.2006 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தி.இராஜநாதன், கேணிக்கட்டு ஒழுங்கை, பண்டத்தரிப்பு எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி/50463)

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
சிற்றி வைன் ஸ்ரேர்ஸ், நிருத்திகா ஜூவெல்லர்ஸ்
உரிமையாளருமாகிய

**மார்க்கண்டு அரியரத்தினம்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி-51473)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ரஜனி இரங்கநாதனின்
பாசமிகு கணவர்

**மாணிக்கம் இரங்கநாதன்**

காலமானதையிட்டு அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய ஊழியர் நலன்புரிக் கழகம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை. (சி-51470)

## கட்டடத் திறப்பு விழா

கொழும்புத்துறை மத்தி சென்.றொசாறியன் சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலையத் தலைவர் ஜோ.ஜெஸ்கின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கியூடெக் இயக்குநர் அருட்திரு சி.ஜே.ஜெயக்குமார் அருட்திரு ம.யேசுரட்ணம், அருட்திரு யே.அருள்தாஸ் யாழ். மாநகர சனசமூக நிலைய உத்தியோகத்தர் து.சோமசுந்தரம், உதவித் திட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் ஜே/62 கிராம அலுவலர் கே.கமலவாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### பெர்னாண்டோ பிரான்சிஸ்

திருகோணமலை நிலாவெளியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பெர்னாண்டோ பிரான்சிஸ் 5.12.2006 அன்று காலமானார்.

அன்னார் சரோஜினியின் (மாலா) அன்புக் கணவரும் சொபி, நேசனா, யூலியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லையா, கந்தையா, சுகிர்தராணி ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.6, Springfield Mound,
NW9 OSR,
London.

வட கிழக்கு,
மானிப்பாய். (55832)

தகவல்:
செல்லையா கந்தையா
(பனங்கட்டி, மாமன், குடும்பத்தினர்)

### திருமதி குணதேவி ஸ்ரீஞானம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் 'குமாரவாசம்', கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணதேவி ஸ்ரீஞானம் 04.12.2006 காலமானார்.

அன்னார் ஸ்ரீஞானத்தின் மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும் Dr. பத்மநாதன் காலஞ்சென்ற திருமதி தர்மதேவி சபாரத்தினம், திருமதி சத்தியதேவி பத்மநாதன், வாமதேவி, சாரதாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.12.2006 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில். (56485)

தகவல்:
ச.பிரகதீஸ்வரன் (பெறாமகன்).

### Dr.சம்பந்தர் குமாரசாமி கிருஷ்ணசாமி

(Retired R.M.P)



தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட Dr ச.கு.கிருஷ்ணசாமி 06.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் நரேந்திரா, மனோகரன் (லண்டன்), பாலச்சந்திரா (லண்டன்), ஞானச்சந்திரா (லண்டன்), வத்சலாதேவி, சறோஜா (கனடா), சாந்தினி (ஆசிரியர், மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ்), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகலட்சுமி, வசந்தா, வளர்மதி, வதனா, ம.சிவானந்தா (வலய முகாமையாளர், NSB யாழ்ப்பாணம்), அருளானந்தராஜா, க.புஷ்பநாதன் (ஆசிரியர், மா்னி.மகளிர் கல்லூரி), விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுதுமலையில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு. (56489)

தகவல்:
குடும்பத்தினர்.

### கனகசபை செல்வநாயகம்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை செல்வநாயகம்பிள்ளை 05.12.2006 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை தங்கமுத்துவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஜேர்மனி), மனோகரன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), பாவனி (பிரான்ஸ்), சாந்தி (ஜேர்மனி), வனிதா (நல்லூர்), சசிகலா (பிரான்ஸ்), மாலதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரராசா, மகேந்திரம், சோமதாஸ், வரதராஜா, சிறிதரன், கமலா, ரமனிகிளி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, அரச வீதி, நல்லூர். (56500)

தகவல்:
சோ.வனிதா (மகள்)

### பொன்னு அன்னலிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு அன்னலிங்கம் (05.12.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியரின் மருமகனும் இளங்கோவன், அன்னலட்சுமி, மகேஸ்வரன், பாஸ்கரன், தனலட்சுமி, பரதலட்சுமி (கொழும்பு), பார்த்தீபன் (சுவிஸ்), இராசலட்சுமி, பொற்செழியன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சிதமலர், மகாலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), வசந்தாதேவி, இராஜேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), இராசதுரை, ஸ்ரீதரன் (சுவிஸ்), லலிதாம்பிகை (சுவிஸ்), சந்திரசேகரம் (லண்டன்), தர்சினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.12.2006 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தஷாலயா,
மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.
தொ.பே.:021 4590471 (55838)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன் தெ.சபேசனின் தந்தை

**நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணித உயிரியல்பிரிவு நண்பர்கள் (2006)
யாழ். மத்திய கல்லூரி.

(56464)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி அப்பையா**

தோற்றம் 10.08.1922 — மறைவு 09.11.2006

எங்கள் குடும்ப விளக்கு அணைந்தாலும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது - என்றும்
பிரகாசித்துக் கொண்டிருக்கும் எங்கள் தெய்வமே!

காரைக்கால் சிவன் கோயில் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (56462)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## பத்தொன்பதாவது ஆண்டு நினைவு நாள்



மலர்வு 12 ★ 09 ★ 1920 — உதிர்வு 07 ★ 12 ★ 1987

**அமரர் வே.த.தணிகாசலம் (அதிபர்)**
(குருமர்மணி)

நல்லாசானாய் பிள்ளைப் பருவத்திலிருந்து
அன்பை நெஞ்சில் பதியமிட்டு மாசில்லா மொழிகூறி
எம் உயர்விற்கு வித்திட்டு தரணியிலே நாம்
நல்வாழ்வு வாழ வழிகாட்டிய தந்தையே!
என்றும் எம் நெஞ்சை விட்டகலீர்.

'இராஜஸ்தலம்'
அல்வாய். (55974)

உங்கள் பாசத்துடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 09 ★ 08 ★ 1934

இறைவன் அடியில் 07 ★ 11 ★ 2006

**லயன் சுப்பையா இராமகிருஷ்ணன்**
(ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

வந்தோம் வாழ்ந்தோம் சென்றோமென்றிங்கு போவோர் பலரிருக்க
வாழ்வோர் நெஞ்சமெல்லாம் வாழ்ந்திடுவோர் சிலரிருப்பார்
சொந்தம் உறவுமுறை சொல்லியழவென்று சுற்றம் பலரிருக்க
சொந்தமில்லா உள்ளங்களும் சுற்றியழ வாழ்ந்தார் சிலரிருப்பார்
அந்த வகையில் உமைத் தந்தையாய் பெற்றதற்கு ஆயிரந் தவங்கள் செய்தோம்
எந்த வகையில் எம் சிந்தையை தேற்றிட யாரிடம் சென்றழுவோம்
எந்தையே! எம் யின் கண்ணீரைத் துடைத்திட நாமென்செய்வோம்
முந்தைவினை என்றெம் சிந்தைதேறிட அந்த இறைவனைச் சரணடைவோம்.

(சி-51431)

குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

செந்தில்ராசா டனிஸ்ரன் என்பவருடைய தே.அ.அட்டை (8725722[illegible]7V) விஷேட அ.அட்டை (0901035409) என்பன வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலுக்கும் கொட்டடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 8/8, கற்குளம், கொட்டடி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்

## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ். வீதியில் கொக்குவில்
இந்துக் கல்லூரிக்கும் பூநாறி மரத்தடிக்கும்இடையில் சகல வசதிகளுடன்
கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொ.பே.: 021 226 3328

என்றும் இதுவே, தரம் நிரந்தரம்

## SUBRA(14) கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

2007 கல்வியாண்டு புதிய பிரிவுகள்
தரம் 3முதல் O/L வரை
ஆரம்பம்: 09.12.2006
மாலை: 3 மணி

எமது Supper Grade ஆசிரியர் குழு:

- Maths - கணேந்திரன்ஜெயக்காந்தன், கணேஸ், ரவீந்திரன், சுபாஜினி, மதுரா
- Science - டார்வின், லக்ஸ்மன்
- Tamli - பண்டிதர் சாந்தன், ரவிராஜ்,பகீரதன்
- English - சந்திரமௌலி, ரட்ணம், சிவகாமி, வேலுப்பிள்ளை
- Religion - ராஜ், ஜெயா
- Hist. - ஐங்கரன், காந்தன், சாருஜா
- Civilization - ஐங்கரன்
- Ent.pr - பாஸ்கரன்
- I.T. - சுபேசன்
- Health - குகதாசன், லக்ஸ்மன்
- Geo.- ஐங்கரன்
- T.L.- காரை கெங்கா, ரவிராஜ்
- E.L- சுப்பிரமணியம்
- Sin.- லீலாகிருஷ்ணன்
- Art.- நிறஞ்சன்

புலமைப் பரிசில் - கைலைநாதன்

**English Medium Classes**

Strat on 9 th 0f December2006 Sat.- 3.30 p.m.

| | |
|---|---|
| mat.- Sutharshan,Sun | Sci.- Thabeshan |
| Env.-Radnam | Eng.-Ravi |
| Health - Ravi | His-Narenthran |
| Civi.-Radnom | Geo.-Inkaran |
| IT.- Subeshan | |

Mrs.Thavarasa

Special Computer Classes &
Special English Literature Classes
Monthly Exames

Director
S.Ainkaran
B.A.(Hons) P.G. Dip in Ed. J.P.

(56000)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் செல்வி நா.சோபனா
அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் கந்தையா நாகரெத்தினம்**

அவர்களின் திடீர் மறைவினை அறிந்து பெரும் துயருற்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
வலிகாமம் மேற்கு,
சங்கானை. (56478)

பிரதேச செயலக
நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் 2006 'A' பிரிவு தாதிய மாணவி செல்வி தட்சணாமூர்த்தி மோகனறாஜி
அவர்களின் அன்புத் தந்தை
**நாகலிங்கம் தட்சணாமூர்த்தி**

அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரா[illegible]திக்கிறோம்.

தாதியர் பயிற்சிக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (56480)

அதிபர்,
போதனாசிரியர்கள்,மாணவர்கள்,
ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி ஆரூரன் கீதா
அவர்களின் மாமன்
**சரவணமுத்து பழனிநாதன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(56460)

பாடசாலைச் சமூகம்
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் தெ.சபேசன் அண்ணா (2006) அவர்களின் பாசமிகு தந்தை
**நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்முதல்வர் சபை,
2007 & 2008

(56481)

## ஓராண்டு நினைவலைகள்



உதிப்பு 24 ★ 09 ★ 1926 — உதிர்வு 19 ★ 11 ★ 2005

**பொன்னையா கந்தசாமி**

திதி:திருதியை

கணப்பொழுதில் பன்னிருதிங்கள் கடந்தனவே
கணமேனும் உம் நினைவு எமைவிட்டகலா.

கண்டி வீதி,
மீசாலை கிழக்கு. (சி-51471)

குடும்பத்தினர்.

## நன்றி ஏற்றருள்க!



தோற்றம் 25 ★ 06 ★ 1962 — மறைவு 10 ★ 11 ★ 2006

**அமரர் நடராஜா ரவிராஜ்**
(சட்டத்தரணி, நாடாளுமன்ற உறுப்பினர்)

ஆண்டு நாற்பத்திநாலு ஆலமரமாய் வாழ்ந்து
ஆடியோடி வேர்விட்டு விழுது விடுங்காலை
காலனவன் கனமான உயிரைப் பறித்தெடுக்க
எண்ணியதால்
ஆனதோ இந்நிலை கலங்குகின்றோம் நாம்.


நானிலத்தில் நாளை என்பது தெரியாது
ஆன்ற கருத்துக்களை அள்ளிவீசி
அமலன் அடி அடைந்து விட்ட ஐயா -நீ
அடைந்து விட்டாய் அமைதி - துடிக்கின்றோம் -நாம்

10.11.2006 அன்று எம் குலவிளக்காம் நடராஜா ரவிராஜ் அவர்கள் அகாலமரணமாகிவிட்ட செய்தி கேட்டு 15.11.2006 வரையும், பின்னரும் நேரில் வந்தும் மலர் வளையத்தை வைத்தும்,தொலைத் தொடர்புகள்மூலமும் நாளேடுகளில் அஞ்சலி செலுத்தியும் தனியான கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் எம் துயரில் பங்குகொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மக்கள் அஞ்சலிக்கான ஒழுங்குகளை தேவையான இடங்களில் ஏற்படுத்தி உதவிய அனைத்து தரப்பினர்களுக்கும் ஏனைய அனைத்து வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் கரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'ராஜ் அகம்',
இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி. (56465)

குடும்பத்தினர்.

## 10 ஆண்டின் நினைவலைகள்



மலர்வு 03 ★ 03 ★ 1917 — உதிர்வு 07 ★ 12 ★ 1996

மூதறிஞர்
**பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை**
(ஓய்வுபெற்ற அதிபர், சைவப்புலவர், முன்னாள் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர், அகில இலங்கை தமிழாசிரயர் சங்கச் செயலாளர், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க உப தலைவர்)

ஏழாலைதனிலிருந்து மட்டுவிலில் வாழ்வமைத்து
மேலான செல்வங்களாம் பிள்ளைகளின் வாழ்வுயர
தாராளக் கல்வியூட்டித் தரணியிலே வாழ வைத்த
சீராளர் பதம் போற்றி வணங்குகின்றோம் வேறறியோம்.

பொன் ஸ்ரீ வாமதேவன்
[சங்கீத ஆசிரியர்]
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (56470)

மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் பத்மநாதன்



நல்லூர்,குமாரவீதியைப் பிறப்பிடமாகவும் வண்ணை நாச்சிமார் கோயிலடியை மணவிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய இராமலிங்கம் பத்மநாதன் (இளைப்பாறிய எழுதுவினைஞர், அரசாங்க அதிபர் பணிமனை-திருகோணமலை) அவர்கள் 01.12.2006அன்று வெள்ளிக்கிழமை மொன்றியலில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-தங்கரெத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற திருமதி சுவர்ணபூபதி அவர்களின் அன்புக்கணவரும், ஹரிகரன்,சுதாகரன் (மொன்றியல்),சசிகரன் (ரொறன்ரோ), காலஞ்சென்ற வித்தியாகரன் ஆகியோரின் பாசமிகுதந்தையும் அனுஷா, ஜெயக்குமாரி (மொன்றியல்), ரேவதி(ரொறன்ரோ) ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன்,பிரவீனா, சுவர்ணவி, அபிராம் (மொன்றியல்), அமிருதா, அருமிதா(ரொறன்ரோ) ஆகியோரின் ஆருயிர்ப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்04ஆம்திகதி திங்கட்கிழமை இல.3955, **Chemin Cote de liesse, Saint Laurent** இல் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:ஹரிகரன்(கரி)514-737-8259/726-6061,சுதாகரன் (சுதா) 514-581-8858
சசிகரன் (சசி) 905-285-0721 (56472)

தகவல்:
ச.கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# மனித உரிமைகளைப் பேணும் நீரோட்டத்தில் இறங்குமா இலங்கை?

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிகவும் மோசமடைந்தும் அதிகரித்தும் வருகின்றன. அது மட்டுன்றி மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்படுகின்றன. இப் பத்தியில் இவை குறித்து ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இந்த உண்மையை உள்நாட்டில் கூறினால், எடுத்துக்காட்டினால், சம்பந்தப்பட்ட தரப்பு - அரசாங்கம் - கோபமுறுவதுடன் மட்டுமன்றி மறுத்துரைக்கவும் செய்வது வழமை. அதுவே நீண்ட காலச் செயற்பாடுமாகும்.

ஆனால், மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களையும் இப்போது சுட்டிக்காட்டி இருப்பது மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சர்வதேச சட்ட நிபுணர்குழு. அத்தோடு இவை குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையம் உடனடியாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்; இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சட்ட நிபுணர்குழு வலியுறுத்தியுள்ளது.

அது மட்டுமன்றி தமது கோரிக்கையை ஐ.நா. மனித உரிமை ஆணையம் தட்டிக் கழிக்கலாகாது என்றும் நிபுணர்கள் குழு எடுத்துரைத்துள்ளது.

இந்த நாட்டில் மனித உரிமை மீறல் மோசமடைந்து வருகின்றது என்று கண்டனம் தெரிவித்ததோடு மட்டுமன்றி ஐ.நா. ஆணையம் இது விடயத்தைத் தட்டிக் கழித்துவிடக்கூடாது என்றும் இடித்துரைக்கப்பட்டிருப்பது, இந்த விவகாரத்தின் பருமனும் உயரமும் எந்தளவுக்கு அதிகரித்த - முற்றிய - கட்டுமீறிய - அளவு கடந்த நிலையை எட்டியுள்ளது என்பதனையே காட்டுகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது, மனிதாபிமானச் சட்டங்கள் தக்க முறையில் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பது ஆகிய இரண்டையும் ஐ.நா. ஆணையத்தால் தடுத்து நிறுத்த முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாலேயே சட்டநிபுணர் குழு இடித்துரைத்திருக்கிறது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

பொதுமக்களையும் இராணுவ இலக்குகளையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்ற மனித உரிமை அடிப்படைத் தன்மையைக்கூட கவனத்தில் கொள்ளாது, அரசாங்கப் படைகள் தாக்குதல்களை நடத்துவது குறித்து சட்ட நிபுணர்கள் குழு சுட்டிக் காட்டி இருக்கிறது.

அதனாலேயே இராணுவத் தாக்குதல்களின்போது அநாவசியமான முறையில் பொதுமக்கள் கொல்லப்படுவதும் அவர்கள் இடம்பெயர்வதும் நிகழ்கின்றன.

பொதுமக்கள் கொல்லப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, மக்கள் இடம்பெயரக் கட்டாயப்படுத்துவது, சிறுவர்களைப் படையில்சேர்த்துக்கொள்வது போன்ற அப்பட்டமான கொடுமையான போர் குற்றங்கள் மலிந்துவிட்டன. சட்ட நிபுணர்கள் குழு இவற்றையும் வெளிப்படுத்தி இருக்கிறது.

மனித உரிமைகள் மீறப்படுவதாக உள்நாட்டில் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கங்கள் பெரிதாகக் கவனத்தில்கொள்வதில்லை.

நிதி உதவி வழங்குவதற்கும் ஏனைய சில சிறப்புச் சலுகைகளுக்கும் மனித உரிமை மீறுதலை சர்வதேச நாடுகள் சம்பந்தப்படுத்திய பின்னரே, இலங்கை இது விடயத்தில்விழித்துக்கொண்டமை உலகத்துக்குத் தெரியாததல்ல.

கடந்த சில வருடங்களாக, மனித உரிமை ஆணைக்குழு ஒன்று இந்நாட்டில் இயங்கிய போதிலும், மனித உரிமை மீறல்களைப் புரிவோரைத் தண்டிப்பதற்கான நேரடி அதிகாரம் அதற்கு இல்லை. குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றால் அதனால்மட்டுமே தண்டனை வழங்க முடியும் .

அவ்வாறு செய்வதற்காக விழுங்கப்படும் காலமோ நீண்டது. அதனால் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் அநேகமாக வெகு இலகுவாகத் தப்பிவிடுகின்றார்கள். அந்த முன்மாதிரியைப் பார்த்து எந்தக் கொடுமையைச் செய்தாலும், தாம் தப்பிவிடலாம், தம்மைக் காப்பாற்றுவதற்கு அரசாங்க இயந்திரம் பக்கபலமாக உள்ளது என்பதை மனதிற் கொண்டு, ஏனையவர்களும் மனித மீறல்களில் - மிகமிகக் கொடுமையான மீறல்களில் - மனித நாகரிகத்தை இழிவுபடுத்தும் மீறல்களில் - ஈடுபடுகிறார்கள்; எந்தவித அச்ச உணர்வும் இல்லாமல்!

கடந்த இருபது வருடப்போர்க் காலத்தில் மனித உரிமை மீறல்கள் மிகக் கொடூரமானவையாகவும் கேட்பார் எவருமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

மனித உரிமைகளுக்கு மிகுந்த மதிப்பளிக்கும் நாடுகளில், மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கென்றே தனியான நீதிமன்றங்கள் உண்டு. நீதிமன்றங்கள் இல்லாத விடத்து, மனித உரிமை ஆணைக்குழுக்கள் விசாரணைகளை மிக வேகமாக நடத்தி நீதி மன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்து குற்றவாளிகளுக்குக் குறுகிய காலத்தில் தண்டனை பெற்றுக் கொடுக்கின்றன. அதன்விளைவாக சிறுசிறு அளவிலான மனித உரிமைகளைச் செய்வோர் கூட விரைந்து தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

அங்கெல்லாம், அரசாங்க அதிகாரிகள், படைகளைச் சேர்ந்தோர், சாதாரண பொதுமக்கள் என்று பல தரப்பட்டவர்களும் மற்றவர்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றார்கள்.

இலங்கை அரசின்-அரசாங்கங்களின்- மனித உரிமைகளைப் பேணும் செயற்பாடுகளும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் உயிர்ப்பில்லாதவை; மந்த கதியில் ஊர்ந்து குற்றவாளிக்குத் தப்பித்துக்கொள்ள இடம்கொடுப்பவை.

நாமும் மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை உள்ளவர்கள்தான் என்று வெளியே சர்வதேசத்திற்குக் காட்டிக் கொள்வதற்கவே ஏனைய விடயங்களில், விவகாரங்களில் வேடம் போடுவது போன்றே இது விடயத்திலும் இலங்கை நடந்து கொள்கின்றது என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

ஜனாதிபதி மஹிந்தா, மனித உரிமைகள் விசாரணைக்குழு ஒன்றை மிக அண்மையில் நியமித்தார்.

அந்த விசாரணைக்குழுவுக்கு மனித உரிமைபேணுதலில் தகைமை சார்ந்த வெளிநாட்டு வல்லுநர்களையும் நியமிக்கப் போவதாக அவர் கூறினார்.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்னரும் இலங்கையில் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், அதிகரித்து வருவதாகவும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சர்வதேச சட்ட நிபுணர் குழு புட்டுக் காட்டுகிறது.

இது எதனை வெளிப்படுத்துகிறது?

மனித உரிமைகளைப் பேணுவதற்காக, அவற்றை மீறுவோர் மீது பக்கச் சார்பின்றி, அரசியல் செல்வாக்குக்கு இடம் கொடுக்காமல், நேரிய வழியில், நேர்மையான முறையில், நீதி முறை நின்று தண்டனை வழங்கக்கூடியதாகவும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்குமான தக்க, தகுந்த,உரிய நடவடிக்கைகளில் இலங்கை அரசு விருப்பத்துடனும் விசுவாசமாகவும் செயற்படுமா என்ற சந்தேகம் எழுவதையே ஆகும்.

அத்தகைய ஒரு நிலையை மாற்றி, இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளைப் பேணுவதில் இன்றைய முன்னேற்றகரமான சர்வதேச நீரோட்டத்தில் கலந்துகொள்ளுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சரண் அடைவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

குடாநாட்டில் அண்மைக்காலமாக இனந்தெரியாத ஆயுததாரிகள் மற்றும் இரவு வேளையில் வெள்ளைவானில் வருவோரின் அச்சுறுத்தல்கள் காரணமாக பலர் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

யாழ்.மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இனந்தெரியாதவர்கள் நடத்தும் கொலைகள் அதிகரித்து வருவதும் இரவுவேளை வீடுபுகுந்து இளைஞர்களை வெள்ளை வானில் வருவோர் கடத்திச்சென்று பின் காணாமற்போவதும் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவது தெரிந்ததே.

இதன் காரணமாக பல இளைஞர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

நேற்றுவரை 32 பேர்வரை இவ்வாறு அச்சுறுத்தல் காரணமாக தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உடனடியாக நீதிவானின் முன்னிலையில் நிறுத்தப்பட்டு அவரது உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்றும் ஆவரங்கால், சரசாலைப் பகுதிகளைச்சேர்ந்த இருவர் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் சரண் அடைந்துள்ளனர்.

அவர்கள் யாழ்.நீதிவானின் உத்தரவின் பேரில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

(அ-1-79)

## கைக்குண்டுகளுடன் பொலிஸார் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ.7

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று கைக்குண்டுகளை வைத்திருந்த பொலிஸார் ஒருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

மட்டக்களப்பு - கல்குடா பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் குறிப்பிட்ட பொலிஸார், மாத்தறையிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுவிட்டு மீண்டும் அம்பாறை நகருக்குத் திரும்பும் வேளையிலேயே இவர் குண்டுகளுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் பொலிஸாருடன் பஸ்ஸில் பயணித்த மற்றுமொரு பொலிஸ்கான்ஸ்டபிள் கொடுத்த தகவலையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது.

(ஐ)

# லயன்ஸ் கழகத்தின் சிக்குன்குனியா சிகிச்சை நிலையம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், சிக்குன்குனியா நோய்த் தடுப்பு சிகிச்சை நிலையத்தினை ஆரம்பித்துள்ளனர்.

இந் நோயினால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களுக்கென விசேட சிகிச்சை நிலையத்தினை ஆரம்பித்து மருந்துகளை லயன்ஸ் கழகத்தினர் வழங்கி வருகின்றனர். இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி மருந்து வகைகளை கொழும்பு லயன்ஸ் கழகங்கள் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஆயுதப் போராட்டங்கள் தொடர்பான சர்வதேச மனிதாபிமான சட்டங்கள்

## ஐ.சி.ஆர்.சி. ஆய்வு ஆவணம் சமர்ப்பிப்பு

கொழும்பு,டிசெ.7

ஆயுதப் போராட்டங்கள் தொடர்பாக பயன்படுத்தக்கூடிய வழமையான சர்வதேச மனிதாபிமான சட்டங்களில் இனங்காணப்பட்டுள்ள 161 விதிகள் பற்றிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் ஆய்வு அறிக்கை அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தேசிய கருத்தரங்கொன்றில் வெளியிடப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவுகள் சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்தப்படுவதின் ஓர் அங்கமாகவே இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

அமைதிக்கான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான வீரமந்திரி சர்வதேச மையத்தின் ஆதரவில் இது நடைபெற்றது.

ஜெனிவா ஒப்பந்தம் போன்ற உடன்பாடுகள் தொடர்பான ஷரத்துகளுக்கு அப்பால் பிணக்கினை உள்ளடக்கும் விதிகளை பாதுகாப்பதாகவும் சர்வதேச தன்மையற்ற பிணக்குகளினால் பாதிக்கப்படுகிறவர்களைப் பாதுகாக்கும் நிலைமைகளை இந்தச் சர்வதேச சட்டம் ஆய்வு விரிவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆய்வு ஆவணம் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தினால் ஓர் ஆவணமாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுவின் இந்த ஆய்வானது உள்ளூர் சட்டங்களை உருவாக்கும் சமயங்களிலும், படைத்தரப்புகளை பயிற்சிகளுக்குட்படுத்தும் சமயங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படவேண்டியவை என்று கருதப்படுகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஜயந்த தனபாலவின் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிராந்திய சட்ட ஆலோசகர் லாறிமேபீ, சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஜி.சீ.வீரமந்திரி ஆகியவர்கள் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

இலங்கை இராணுவ பிரதிநிதிகள், அரச அமைச்சுகளின் பிரதிநிதிகள், ராஜதந்திரப்பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

(ப)

# பரீட்சை நிலையங்கள் தென்மராட்சியில் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்களில் சில மாற்றப்பட்டுள்ளன என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

வரணி மகா வித்தியாலயம் மண்டப இல. 1 மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திற்கும் -

வரணி மகாவித்தியாலயம் மண்டபம் இல. 2 மந்துவில் றோ.க.த.க. பாடசாலைக்கும் -

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மண்டப இல. 1 மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கும் -

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மண்டப இல. 2 சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கும் -

திருக்குடும்ப கன்னியர் மடம் மண்டப இல. 4 யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் -

திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயம் மண்டப இல. 5யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களால் பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளது என்றும் -

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் மாற்றம் செய்யப்பட்ட நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் - வலயக் கல்விப்பணிப்பாளர்மேலும்கேட்டுள்ளார்.(1-202)

# கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளக பயிலுநர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன என்று கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்தார்.

(1-203)

# ஆசிரியர் வாண்மை இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் 'படி - ஆசிரிய வாண்மை இதழ்' வெளியீட்டு விழா நாளை முற்பகல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக ரெலிகொம் நிறுவன முகாமையாளர் எல்.சரவணபவனும் சிறப்பு விருந்தினராக ஆறு.திருமுகனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நூலின் விமர்சன உரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்துவார்.

(202)

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் அமைச்சரவையின் அனுமதியுடன் இந்தத் துணை விதிகள் சேர்க்கப்பட் டுள்ளன என்றும் இந்தப் புதிய நடவடிக்கையால் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படாது என்றும் இத்துணை விதிகளின் பிரகாரம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபுரிவோருக்கு 10 வருடங்களுக்குக் குறையாத, 20 வருடங்களுக்கு மேற் படாத சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்குக் காலத் திற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அதன்படி பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பலப்படுத்தப்படல் வேண்டும்.

தற்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வலுவின்றிக் காணப்படுகின்றது. அதை வலுப்படுத்தும் நோக்கில் மேலும் சில துணை விதிகளை அதனுடன் இணைக்க அமைச் சரவை அனுமதி வழங்கி இப்போது அந்தத் துணை விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்துணை விதிகள் இன்று முதல் (புதன்கிழமை) வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு நடைமுறைக்கு வருகின்றது. இத்துணை விதிகளின்படி பயங்கரவாதத்திற்கு ஆதரவாகச் செயற்படுதல், பயங்கரவாதிகளின் சீருடைகளை அணிதல், அவர்களின் இலச்சினையைக் கொண்டிருத்தல், பயங்கரவாதிகளின் சார்பில் நிதி திரட்டுதல், தகவல் கொடுத்தல் மற்றும் வேறு வழிகளில் உதவுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு 10 வருடங்களுக்குக் குறையாத, 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை வழங்கப்படும்.

### அமைதி முயற்சி பலப்படும்

இப்புதிய ஏற்பாட்டின் மூலம் அமைதி முயற்சி ஒருபோதும் பாதிக்கப்படாது. அமைதி முயற்சியை மேலும் பலப்படுத்தவும், பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவுமே இத்துணை விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன" - என்றார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்-

"இந்தப் புதிய ஏற்பாடானது அமைதி முயற்சியை மாத்திரமின்றி வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியையும் பாதிக்காது. புலிகள் எந்நேரமும் பேச்சுக்கு வரலாம். இப்புதிய ஏற்பாடு ஒரு போதும் அமைதிப் பேச்சைப் பாதிக்காது.

"இந்தப் புதிய விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் காலப் பகுதியில் பொது மக்கள் பாதிக்கப்பட்டால் அது தொடர்பான விசாரணை நடத்தவும், அவர்களுக்கு உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென மேன்முறையீட்டுச் சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது." - என்று தெரிவித்தார்.

(ஐ)

## நாளை

கார்த்திகை 22
வெள்ளிக்கிழமை
08.12.2006
திதி : சதுர்த்தி
பின்னிரவு: 04.46
நட்சத்திரம் : புனர்பூசம்
பிற்பகல் : 03.14
சுபநேரம் : 06.15 - 07.47
ராகுகாலம் : 10.47 - 12.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 130 மேலதிக வாக்குகளால் 'பட்ஜெட்' நிறைவேறியது

கொழும்பு, டிச. 07

வரவு-செலவுத் திட்டம் நேற்று மாலை நாடாளுமன்றத்தில் சகல நிலைகளிலும் 130 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

வழமையாக அனைத்து விடயங்களிலும் கூட்டமைப்புடன் வாக்களிக்கும் ஐ.தே.க. எம்.பி. ரி.மகேஸ்வரனும் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். ஆதரவாக 142 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் பதிவாகின. (த-02)

# இராணுவ மேயரிடம் கைப்பற்றப்பட்ட 22 லட்சம் ரூபா பணம் நீதிமன்றில் ஒப்படைப்பு

கொழும்பு, டிச. 07

விடுதலைப் புலிகளுக்கு உளவுத் தகவல்களை விற்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இராணுவ மேயரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்து 22 லட்சத்து 21ஆயிரம் ரூபா பணத்தைப் பொலிஸார் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

அந்தப் பணத்தை நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (த-06)

# பயங்கரவாத செயலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகளின் முன்னேற்றம் போன்றவற்றை மீளாய்வு செய்த நேற்றைய (புதன்கிழமை) அமைச்சரவைக் கூட்டத்தில் பொதுப் பாதுகாப்புக்கட்டளைச்சட்டம் மற்றும்தற்போது நடைமுறையிலுள்ள அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால், தனிநபர்கள் மற்றும் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதம், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை தடுப்பதாற்கான ஒழுங்குவிதிகள் இன்று (புதன்கிழமை) முதல் நடைமுறைக்கு வரும்வகையில் பிரகடனப்படுத்தப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

### ஐ.நா. கடப்பாடுகளுடன் இயைந்த ஒழுங்குவிதிகள்

புதிய ஒழுங்கு விதிகள் நபரொருவர், பல நபர்களைக் கொண்ட ஒரு குழு அல்லது நிறுவனம் பயங்கரவாதம், ஏதாவது குறிப்பான பயங்கரவாத நடவடிக்கை அல்லது ஏதாவது பயங்கதவாதச் செயற்பாட்டுக்குத் துணைபோகக்கூடிய ஏதாவது நடவடிக்கை அல்லது குறிப்பான பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபடுவதை விட்டும் தடைசெய்கிறது.

ஒழுங்குவிதிகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் உள்ளிட்ட பயங்கரவாதத்தைத் தடுத்தல் மற்றும் அடக்குதலுடன் தொடர்புடைய சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சர்வதேச சட்ட கருவிகளினால் இலங்கை தொடர்பாக வெளியிட்பட்ட கட்பாடுகளுக்கு வலுவூட்டி பயங்கரவாதத்தைத் தடுத்து அடக்கி அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதைக் கட்டாயப்படுத்துகிறது.

### தடைசெய்யப்பட்டுள்ளவை

பயங்கரவாதம் அல்லது பயங்கரவாதச் செயற்பாட்டுடன் தொடர்புடைய ஏதாவது சீருடை, உடை, அடையாளம், சின்னம் என்பவற்றை அணிதல், காட்சிக்கு வைத்தல், கொடியேற்றல் அல்லது வைத்திருத்தல் என்பவற்றையும், பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடைய கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்தல், ஒன்றுகூடுதல், நடத்துதல் அல்லது பங்கேற்றல் போன்றவற்றையும் பயங்கரவாதம் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பின், ஓர் உறுப்பினர் அல்லது அங்கத்தவருக்கு புகலிடமளித்தல், மறைத்துவைத்தல் அல்லது உதவுதல் போன்றவற்றையும் பயங்கரவாதம் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளுடன், தொடர்புடைய ஏதாவது செயற்பாட்டில் பங்கேற்றலையும் அவை தடைசெய்கிறது.

### கொடுக்கல்வாங்கல்களுக்கும் தடை

புதிய ஒழுங்குவிதிகளின் கீழான தடைகளில் பயங்கரவாதம் அல்லது ஏதாவது பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவற்றில் ஈடுபட்டுள்ள எவராவது நபர், குழு, நிறுவனம், உறுப்பினருக்கு பொருள் ரீதியாக அல்லது வேறு வழிகளில்பங்களிப்புச்செய்தல், நன்கொடை வழங்குதல், விற்பனை செய்தல், வாங்குதல், கூலிக்குக் கொடுத்தல், குத்தகைக்கு விடுதல், பெற்றுக்கொள்ளுதல், கிடைக்கப்பெறச் செய்தல், நிதியளித்தல், விநியோகத்தில் அல்லது கடனுக்குக் கொடுத்தல் போன்றனவும் உள்ளடங்குகின்றன.

அமைதியான அரசியல் தீர்வொன்றை விருத்திசெய்தல், பயங்கரவாதத்தை அல்லது குறிப்பான பயங்கரவாதச் செயற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல், சமூக வாழ்க்கைக்கான அத்தியாவசிய சேவைகளையும் வழங்கல்களையும் பராமரித்தல் அல்லது எந்தவொரு இலங்கையராலும், சர்வதேச அரசாங்க அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தினாலும் வேறு ஏதாவது சட்டரீதியான நோக்கத்திற்காகவும் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்துமூல அனுமதியுடனும் நல்ல நோக்கத்துடனும் செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் நோக்கத்திற்கும் ஒழுங்குவிதிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு புதிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்கின்றன.

### தகவல் வழங்கவும் தடை

பயங்கரவாதம் அல்லது பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படும் அல்லது ஈடுபட்ட நபரொருவர் அல்லது ஏதாவது குழுவுக்கு தேசிய பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஏதாவது தகவல்களை வழங்குவதும் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தடைசெய்யப்பட்டவைகளாக உள்ளன.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் இந்த ஒழுங்குவிதிகளின் அமுல்படுத்துகை கொண்டுவரப்படும். தகுதிவாய்ந்த அதிகாரியின் தீர்மானமொன்றினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் அத்தகைய தீர்மானத்திற்கெதிராக அத்தகைய நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட விசேட குரலெழுப்புகை நீதிமன்றமொன்றுக்கு மேன்முறையீடு செய்வதற்கும் இந்த ஒழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும்

- இந்த ஒழுங்குவிதிகளை மீறிச் செயற்படுவதானது குற்றத்தின் தன்மையைப் பொறுத்து மேல் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்படுகின்ற 10 தொடக்கம் 20 வருடங்கள் வரையான அல்லது ஐந்து தொடக்கம் பத்து வருடங்கள் வரையான வேறுபடத்தக்க சிறைத்தண்டனைகளைக் கொண்டிருக்கிறது.

தனிநபர்கள், குழுக்களுக்கு மேலதிகமாக இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் குற்றங்களை ஏற்படுத்துவதற்கு பொறுப்பானவர்களாக கூட்டுறவு அமைப்புகள், பங்குடமைகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் என்பனவும் உள்ளடக்கப்படுகின்றன. கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பங்குடமைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது பங்காளரும் அத்துடன் அத்தகைய நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பொன்றின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் குற்றங்களுக்கான பொறுப்பை நேரடியாக ஏற்பர். (ஐ)

# பயங்கரவாதச் சட்ட விதிகள் குறித்து நோர்வேக்கு அரசு விளக்கமளிக்கும்

கொழும்பு, டிசெ.7

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் விரைவில் கிளிநொச்சி செல்வார் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழான புதிய ஒழுங்கு விதிகள் குறித்து அரச சமாதான செயலகப் பணிப்பாளர்கலாநிதி பாலித கொஹொன்ன, ஹன்ஸன் போவருக்கு விளக்குவார். புலிகளைப் பேச்சுக்கு வரும்படி போவர் புலிகளுக்கு அழைப்பு விடுப்பார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத் தகவலைத் தெரி வித்தார். (ஐ)

# மட்டக்களப்பில் படை முகாம்கள் மீது ஷெல் வீச்சு

மட்டக்களப்பு, டிச. 07

மட்டக்களப்பு - கிரான் மற்றும் மாங்கேணிப்பகுதிகளில் அமைந்துள்ள படையினரின் முகாம்கள் மீது நேற்று முன்தினம் மாலை முதல் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்கள் மேற்கொண்டனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

கிரானிலுள்ள படையினரின் முகாம் மீது நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவிலும், மாங்கேணி இராணுவ முகாம் மீது நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவிலும் மோட்டார் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

புலிகள் நடத்திய தாக்குதலுக்கு படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, படையினரே முதலில் தமது நிலைகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், அதன்பிறகே தாம் படையினர் மீது பதில் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ஐ - 3)

# விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ள இயக்கமொன்றில் இணைவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இந்த உண்மையை உணர்ந்து 24பேர் இதுவரை சரண் அடைந்துள்ளனர்.

எந்தவொரு இராணுவ முகாமிலோ, யாழ். சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகத்திலோ, பொலிஸ் நிலையத்திலோ அல்லது யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலோ சரணடையமுடியும்.

சரணடைந்தவர்கள் நன்கு கவனிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பாதுகாப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுப்பர். அத்துடன் அரசு ஆரம்பித்துள்ள புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு அளிப்பதற்கும் வெளிநாட்டில் தொழில் வாய்ப்பபை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும் - என்றுள்ளது. (அ-1)

# யாழ். நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்தன.

பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த அந்தப் பகுதியில் கிளைமோர் வெடித்த போது அங்கு நின்றி ருந்த பொதுமக்கள் அதில் சிக்க நேர்ந்தது.

குண்டுச் சிதறல்களால் தாக்குண்டு மரணமான இரு ஆண்களின் சடலங்கள் அவ்விடத்தில் காணப்பட்டன. பின்னர் அவை யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. படுகாயங்களுடன் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவரும் சிறுமி ஒருத்தியும் அங்கு பின்னர் உயிரிழந்தனர். காயங்களுடன் ஆண் ஒருவரும் மற்றொரு சிறுமியும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜாசம்பவம் நடந்த பகுதியைப் பார்வையிட்டார்.

சந்தடி மிகுந்து காணப்பட்ட யாழ். நகரப் பகுதி இந்தச் சம்பவத்தில் அல்லோலகல்லோலப் பட்டு அடங்கியது. கடைகள் மூடப்பட்டு நகரிலிருந்து மக்கள் வெளியேறினர்.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் பெயர் விவரங்கள் உடனடியாகத் தெரிய வரவில்லை. (ஐ-203-1)

# முஸ்லிம்களின் உரிமைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்வரும் முக்கிய அம்சங்களும் நிபுணர் குழு தயாரித்த நகல் யோசனையில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால், அவற்றை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

★ சிங்களம், தமிழ் இரண்டும் அதிகார பூர்வ மொழிகளாகவும் நிர்வாக மொழியாகவும் இருக்க, சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்றும் நாட்டின் தேசிய மொழிகளாக இருக்கலாம்.

★ மேலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழிகளும் பாடசாலை இறுதிப் பரீட்சையில் கட்டாய பாடங்களாக இருக்கவேண்டும்.

★ தேசிய காவல்துறை சேவை மற்றும் மாகாண காவல்துறை சேவை இரண்டையும் அமைத்து, இரண்டும் ஒருங்கிணைந்து பணிபுரியுமாறு செய்தல்.

★ நாடாளுமன்றம், மேல்சபை ஆகிய இரண்டு நிறுவப்பட வேண்டும். மேல் சபை சிறுபான்மையினருக்கும் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

★ அத்தோடு ஏழு பிரதான அமைச்சர் பதவிகளுடன் சிறுபான்மை இனப்பிரதிநிதிகளுக்கு இரண்டு இணைப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.

★ இலங்கையில் வாழும் பல இன, மத, சமூகங்களுக்கிடையே உண்மையான அதிகாரப்பகிர்வு வேண்டும். மாகாண ஆட்சிகள், உள்ளூர் ஆணையங்கள் அமைக்கப்பட வேண்டும். அனைத்து சமூகத்துக்கும் மத்திய அரசில் அதிகாரப் பகிர்வு இருக்கவேண்டும். அரசியலில் அனைவரையும் ஒன்றிணைத்து தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்த வேண்டும்.

★ இலங்கை குடியரசு என நாட்டை அழைக்கலாம். தனி சுதந்திர நாடு எனக் கூறலாம். மாகாணங்கள், மாவட்டங்கள், பகுதிகள் போன்வற்றைத் தவிர்க்கலாம்.

அனைவரும் சிறிலங்கன் என்று பொது அடையாளத்துக்குள் பலவீனப்படுத்தாமல், ஒவ்வொரு சமூகத்துக்கும் அதன் மொழியையும் கலாசாரத்தையும் வளர்க்கவும் மேம்படுத்தவும் உரிமை வழங்கப்பட வேண்டும். மேலும் தனது வரலாற்றைப் பேணவும் அதிகாரத்தில் தனக்குரிய பங்கைப் பெறவும் உரிமை அளிக்கப்பட வேண்டும். (அ)


**கைடன் கல்வி நிலையம்**
வட்டுக்கோட்டை

**கல்வியாண்டு-2007**
ஆரம்பம் : 09.12.2006 சனி பி.ப 3 மணி

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் N.தேவா | கணிதம் சண் | தமிழ் K.சுகாஸ் |
| சமூகக்கல்வி பார்த்தீபன் | ஆங்கிலம் சூரி | சமயம் ஜெகதீஸ் |

English Medium Classes -Ye. 6-10
தரம் 5 புலமைப் பரிசில் வகுப்புகள்
இயக்குநர் : திருமதி மு.உஷா

**O/L மேல்மாகாண வினாத்தாளிற்கான விடைக்கருத்தரங்கு**
08.12.2006 வெள்ளி காலை 9 மணி
விசேட ஆசிரியர் குழு
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்

**LOGIC திரு. காஸ்**
A/L 08 சனி, ஞாயிறு, வெள்ளி
A/L 07 சனி, ஞாயிறு, செவ்
DAY புதன், வெள், சனி, ஞாயி
அனுமதிகள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)

**எலைற் கல்வி நிறுவனம்**
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வி ஆண்டு - 2007
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் 10.12.2006 ஞாயிறு காலை 9 மணி

**கற்சுமி கல்வி நிலையம்**
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கல்வி ஆண்டு 2007ற்குரிய தரம் 1 முதல் O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம் 09.12.2006 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு

**விக்னா கல்வி நிறுவனம்**
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
(Mon. Tue. Thu. Fri)
Eco.B.கஜீதரன் (7.30-8.30)
Acc.P.பகீரதன் (8.30-10.30)
Com.முரளி (10.30- 11.30)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**PERSONAL CLASSES**
364, ஸ்ரான்லி வீதி, யாழ்.
GAQ, BA-I, BA-FINAL
BA-FINAL-பேராதனை 8-9
GAQ - 06 } REVISION ENGLISH தமிழ் } 12-1
A/L - 2008 அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க (ஒரு பிரிவு மட்டும்)
ஆரம்பம் : 09.12.2006 சனி, ஞாயிறு 2-3
தமிழ் - திரு. தர்மராஜா
English: Mr.Maheswaran


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org